தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் கானுயிர் நிழற்படக் கண்காட்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பூங்கா வளாகத்தில் ஓசை சுற்றுச்சூழல் அமைப்பின் சார்பில் கோவை மாவட்ட வனத்துறை, மெட்ரோ போலீஸ் ரோட்டரி சங்கம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து 12வது கானுயிர் நிழற்படக் கண்காட்சி இன்று (28-10-2015) துவங்கியது.

ஐந்து நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில் மேற்கு தொடர்ச்சி மலையின் அமைப்பு, நீராதாரமாக விளங்கும் உண்மையை விளக்கும் தன்மை, பல்லுயிர் பெருக்கம், மனித விலங்கின மோதல் ஆகியவை குறித்த 1500க்கும் மேற்பட்ட அரிய புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளது. காணொலிக் காட்சி மூலமும் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த விளக்கப் படங்களை கோயம்புத்தூர் மகேந்திரா பம்ப்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. மகேந்திர ராமதாஸ் அவர்கள் துவக்கி வைத்தார்.

துவக்க நாளான இன்று வேளாண் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட கோவை, திருப்பூர் மாவட்ட பள்ளி மாணவ மாணவிகளும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

ஓசை அமைப்பின் தலைவர் திரு. காளிதாசன் அவர்கள் அறிமுக உரையாற்றினார். கோவை மாவட்ட வன அலுவலர் திரு. செந்தில் குமார், கோவை தொழில் வர்த்தக சபை தலைவர் திரு. சுப்பிரமணியம் மற்றும் ரோட்டரி மெட்ரோ போலீஸ் தலைவர் திரு. விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

தலைமையுரை ஆற்றிய வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர் ச. மகிமைராஜா அவாகள், இக்கண்காட்சி புகைப்படக் கலைஞர்களின் திறமைகளை வெளிக் கொணர்வதோடு மக்களிடையே பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் உள்ளது. அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்து வாழ படைக்கப்பட்டவை. மனிதர்கள் அதை உணர்ந்து செயல்பட

வேண்டும். அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் பயோஸ்பியர் என்ற ஆராய்ச்சித் திட்டத்தில் செய்றகையாக சுற்றுச்சூழலை வடிவமைத்து விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டதில் இயற்கையைப் போன்று நம்மால் சூழலை உருவாக்க முடியாது என்றும் எட்டு மாதத்திற்குள் கரியமில வாயு அதிகமாக உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்தனர். எனவே, நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மற்றும் அனைத்து இளைஞர்களும் நம் இயற்கையைப் பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றார்.

கண்காட்சியைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றிய முதுமலை புலிகள் சரணாலய கள இயக்குனர், திரு. சீனிவாச ரெட்டி அவர்கள் புகைப்படக் கண்காட்சி அமைப்பாளர்களைப் பாராட்டி ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று அனைத்து பள்ளி, கல்லூரி மாணவர்கள் பார்வையிட வேண்டும். இதே போல் புகைப்படம் எடுத்து மாணவர்கள் ஆர்வத்துடன் புகைப்படம் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

விழாவில் வண்ணத்துப்பூச்சி ஆய்வுக் கட்டுரையை கல்லூரி மாணவர் திரு. பிரபாகர் சமர்ப்பித்தார். இக்கண்காட்சியினை கோவை மாவட்ட பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்புக்கு தங்கள் பங்களிப்பைத் தந்தால் தான் இக்கண்காட்சி அமைத்ததற்கான முழுப் பயன் கிடைக்கும் என்றார்.

விழாவில் ஓசை அமைப்பின் தன்னார்வலர்கள், ஆர்.கே. போட்டோ சென்டர் தலைவர் மருதாச்சலம் அவர்கள், வேளாண் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா, திட்ட அலுவலர் முனைவர் மு.ரா. லதா அவர்கள், பாரதியார் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் துறை முன்னாள் தலைவர் லட்சுமண பெருமாள்சாமி மற்றும் உயிர் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் பிரபாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

விழா நிறைவில் ஓசை அமைப்பைச் சேர்ந்த திரு. தமிழ்மறை அவர்கள் நன்றி கூறினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்